முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!

தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 25 திகதி முதல்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 01 திகதி வரை

(07.04.2024 ஞாயிறு முதல் 14.04.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஓங்கார ஞானக்குடில் படைத்த
ஓங்கார ஞானியே அரங்கா
ஓங்காரனாக அவதாரம் புரிந்த
உயர் ஞானியே உமை போற்றி
2. போற்றியே சோபகிருது சேல்திங்கள்
புகலுவேன் இருபானை திகதிமேல்
ஆற்றல்மிகு குரோதி தகர்திங்கள் ஏகதிகதி வரை
அறிவிப்பேன் இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே நடக்கும் வாரநிகழ்வாக
தக்க வருங்கால பலன்குறித்த ஆசி
நன்னயமாய் அகத்திய மகரிஷியும்
நாட்டிடுவேன் வார ஆசிபலனாக
4. ஆகவே ஆளுமை பதவிக்கு
அரசியல் தேர்தல் களம்காணும்
மிகையான கழகங்கள் எல்லாம்
மெய்வழி மறந்து கொள்கையை கடந்து
5. கடந்து கனதனங்கள் செலவிட்டு
கனதனம் மேல்வைக்கும் பற்றை
கடமைகள் மக்கள் சேவைமேல்
கருணைபட வைக்கா செயல்படும்

6. செயல்படும் கழகங்கள் எல்லாம்
செயலிழந்து முடங்க நேரும்
தயவிலா ஆளுமை அதிகாரிகள்
தகுதி இழந்து மக்கள் பார்வையில்

7. பார்வையில் பின்னடைவு கண்டு
பரிதவிப்பு பதவிஇழப்பு காணநேரும்
பார்த்துரைக்க தீதான வழிவகை விட்டு
பரோபகாரம் தரும சிந்தை பெருக்கி

8. பெருக்கியே மக்களை காக்கின்ற
பிரணவக்குடில் படைத்த ஞானி
ஆறுமுக அரங்கமகானை ஏற்று
அனைவரும் வணங்கி வர

9. வருங்காலம் மக்களின் தேவைகள்
வாழ்வாதாரம் காக்கும் வண்ணம்
அருந்தவசி ஆசிதனை ஏற்று
அன்னதான சேவைகளையும் ஏற்று

10. ஏற்றுமே தரும சேவை ஆற்றிட
ஏற்றுமே மக்களை காத்திடும்
ஆற்றல் மிக்க ஞானஆட்சி நடத்திட
அரங்கன் தயவும் துணையும் வேண்டுமென

11. வேண்டியே பதவியாளர்களான
வினவிட ஆளுமை சக்திகளும்
தொண்டாற்றும் அதிகாரிகளும்
தொடர்ந்துவர நல்ல ஆட்சிதனை படைப்பர்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 25ம் நாள் **07.04.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் முதல் நாள் **14.04.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலக மக்களுக்கு ஞானம் அளித்து கடைத்தேற்றிடவே ஓங்கார ஞானக்குடிலை உருவாக்கி வழி நடத்தும் மகாஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகரே ஓங்காரன் முருகப்பெருமானின் அவதாரமாக அவதரித்திட்ட உயர்ஞானியே அரங்கமகா தேசிகரே உம்மை போற்றியே சோபகிருது வருடம் பங்குனி மாதம் 25ம் நாள் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் முதல் நாள் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் அருளுகிறேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டின் ஆட்சி பொறுப்பை அடைய வேண்டும் என்று தேர்தல் களம் காணுகின்ற பல கட்சிகள் எல்லாம் உண்மை வழிகளை மறந்து கொள்கைகளை விட்டுக் கொடுத்து ஏராளமாய் பொருளை செலவு செய்து தேர்தல் களம் காணுகின்றன. பொருள் மீது நம்பிக்கை வைத்து வெற்றி பெற எண்ணும் கட்சிகள் கடமைகள் மேல் வைக்காமலும், மக்களுக்கு செய்யும் சேவைகள் மேல் வைக்காமலும், மக்கள் மீது கருணையோடு நடக்காமலும் நடந்தால் அவைகள் மக்களிடம் மதிப்பை இழந்து முடங்க நேருமப்பா.

தயவு இல்லாத ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் தகுதி இழப்பார்கள் மக்களின் பார்வையிலே அவர்கள் எல்லாம் பின்னடைவை சந்தித்து பரிதவிக்க நேருமப்பா. பதவிகளை இழப்பார்கள்.

ஆதலினாலே தீமை பயக்கும் செயல்களில் ஈடுபடாமல், பரோபகாரத்தையும் தர்மத்தையும் கடைப்பிடித்து தர்மங்களை செய்து வருவதுடன் ஞானமும் மக்களுக்கு அளித்து காக்கின்ற ஓங்காரக்குடிலை உருவாக்கிய மகாஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகரையும் அவர்தம் கொள்கைகளையும் ஏற்று ஞானிகளை வணங்கி வருவதுடன் மக்களின் தேவைகளை, மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றும் விதத்திலே நடந்து அருந்தவசி அரங்கரின் ஆசிகளை பெற்று அரங்க மகான் கூறும் அன்னதானத்தை தாராளமாய் செய்து தர்மபலத்தினை பெருக்கிட வேண்டும். மக்களை காக்கும் விதமாக ஆற்றல் மிக்க ஞானஆட்சி நடக்க வேண்டுமாயின் ஞானி அரங்கரின் தயவும் துணையும் வேண்டும் என உணர்ந்து பதவியாளர்களும், ஆளுமை சக்திகளும், அதிகாரிகளும் அரங்கரின் கொள்கையை ஏற்று தர்மவழியில் நடந்து வரவர அவர்கள் இவ்வுலகிலே நல்லாட்சியை ஞானஆட்சியை படைப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—